# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (பங்குனி-சித்திரை) ஏப்ரல் 2009 ஏர்-24, உழவு-4, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-42663650

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| தேசிய விருது | - 4 |
| நன்கொடை பட்டியல் | - 5 |
| சூழ் நிலை | - 6 |
| பயோடெக்னாலஜி | - 9 |
| வாழ்த்துகிறோம் | - 11 |
| சமைத்துப்பாருங்கள் | - 12 |
| வாழ்த்துகிறோம் | - 13 |
| சமூகத்தொண்டு | - 14 |
| அரிய திட்டம் | - 16 |
| எண்ணங்களே ஏணிப்படிகள் | - 19 |
| வருந்துகிறோம் | - 20 |
| 5S செயல்முறை | - 21 |
| மணமகள் தேவை | - 25 |
| மணமகன் தேவை | - 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே!

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே !

வணக்கம். இன்றல்ல, நேற்றல்ல சுமார் 5000 வருடங்களுக்கு முன்பிருந்தே, சங்க இலக்கிய காலம் முதற்கொண்டு "கொங்குநாடு" ஒரு தனி நாடாக இருந்து வந்துள்ளது. பல்வேறு காலகட்டங்களில் தனது தனிச்சிறப்புடன் இருந்துள்ளது. காலப்போக்கில் இது மறைந்து விட்டது.



இன்று நமது பகுதியில், ஏன் கொங்கு நாடு புத்துயிர் பெறக்கூடாது என்ற கருத்து பரவலாக உள்ளது. காரணம் இதுவரை ஆட்சிக்கு வந்த யாரும் நமக்கென தனி கவனம் செலுத்தவில்லை. நமது பேரவை ஒரு சமுதாய அமைப்பாக இருந்து வருகிறது. பேரவை அரசியல் சார்பின்றி இயங்கினால் வரும் காலத்தில் நமக்கு கிடைக்க வேண்டிய திட்டங்கள், உரிமைகள் இல்லாமல் போகும். அரசியலில் கால்பதித்தால் மட்டுமே இனி நாம் சாதிக்க முடியும்.

இதுவரை நமது ஓட்டுக்களைப் பெற்ற எந்த அரசியல் கட்சியின் பிரதிநிதியும், நமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லை. காரணம், அவர்கள் ஒரு கட்சி சார்ந்தவராக இருப்பதால் சுதந்திரமாக செயல்பட முடியாமல் அவர்களின் கைகள் கட்டப்பட்டு விட்டன. தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை மட்டும் தந்து விடுகின்றனர். ஆனால் சொன்ன வாக்கு காப்பாற்றப்படுவதில்லை. 'தலைமையின் கட்டுப்பாடு' என்ற பெயரால் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்.

பல நலத்திட்டங்கள் கிடப்பில் பல வருடங்களாகக் கிடக்கின்றன. மீண்டும் அடுத்த தேர்தல் வரும்போது வாக்குறுதிகள் புத்துயிர் பெறும். ஆனால் எதுவும் நடைமுறைக்கு வராது.

இந்த நிலை மாற வேண்டும். கொங்குநாட்டுப் பகுதியின் உரிமைக்காக மட்டுமே போராடும் பிரதிநிதிகள் வந்தால், இந்த நிலை மாறும். அவர்களின் பேச்சும், மூச்சும் நம் கொங்குநாட்டைச் சுற்றியே வரும். மக்கள் மன்றங்களில் நமது குரல் ஒலிக்கும்.

ஆளுகின்ற வர்க்கம் நம்மைத் திரும்பிப் பார்க்கும். நமது தேவைகளை உணர்ந்து, காரியம் பல நடக்கும். நலிந்து கிடக்கும் நமது வர்க்கம், விடியலை நோக்கும்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நம்மை அலட்சியம் செய்கின்றனர். திட்டங்களை செயல்படுத்துங்கள் என்று கூறினால், அதைத் தள்ளிபோட ஆயிரம் காரணம் சொல்கின்றனர். நம்மைச் சமாதானப்படுத்த முயல்கின்றனர். ஆனால் கோரிக்கைகளைச் செயல்படுத்த முயற்சி எதுவும் செய்வதில்லை.

மத்திய, மாநில அரசுகள் நம்மைத் தொடர்ந்து புறக்கணிக்க நமது நல்ல பண்புதான் காரணம். ஏனெனில் எது நடந்தாலும் நாம் தட்டிக்கேட்பதில்லை. முன்னேற்ற திட்டங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கும் தொழில் நிறுவனங்கள், பாசனத்திட்டங்கள், மேம்பாலங்கள் போன்ற திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கு அந்தந்தப் பகுதி தலைவர்கள் திட்டங்களை எடுத்துச்சென்றுவிட்டனர். கொங்கு மண்டலம் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ஆளும்

ஆத்திரப்படும் இயல்புடையவன் அருஞ்சாதனைகளை சாதிக்க மாட்டான். - மகான்

கட்சிகளின் மூலம் கொங்கு நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்றுத்தர தவறி விட்டனர்.

திட்டங்களைச் செயல்படுத்தாவிட்டாலும், செய்யத் தவறினாலும் அரசியல்வாதிகளுக்குப் பாதிப்பு இல்லை. காரணம், தனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ ஏதாவது ஒரு கட்சிக்கு மக்கள் வாக்குஅளித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் அதன்பின் அடுத்த தேர்தல் வரும் வரை மக்களால் மக்கள் பிரநிதிகளை எளிதில் சந்திக்கக் கூடமுடியாது. வாக்குக்கேட்க வீட்டிற்கு வரும் தலைவர்களை அதன்பின் அடுத்த தேர்தலில்தான் காணமுடியும்.

இதுவரை கொங்கு நாட்டின் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள் மத்திய,மாநில கட்சிகளின் உறுப்பினர்களாக இருப்பதால் கொங்கு மக்களின் தேவைகளை எடுத்துக்கூறாமல் கொங்கு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தாமல் விட்டுவிட்டனர். விவசாயமும், தொழில் வளமும் நசிந்துபோய் நாளுக்குநாள் மோசமாகி அழிந்துவிடும் நிலைக்கு வரக்காரணம், “கொங்கு நாடு ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டதுதான்” காரணமாகும்.

கொங்கு மக்களின் தேவைகளை எடுத்துரைக்கும் ஆட்சியாளர்கள் நமக்குத் தேவை. கொங்கு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி, வேலைவாய்ப்பில் உரிமை பெற்றுத்தரவும், அடிப்படை வசதியோடு வாழவும், விலைவாசி ஏற்றத்திற்கு ஈடாக தொழில்துறை பாதுகாப்பை உருவாக்கி, தொழில்களைக் காப்பாற்றக் கொங்கு நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காகப் பாடுபடுவதையே லட்சியமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள ‘கொங்குநாடு முன்னேற்றப்பேரவை’, இத்தேர்தலில் போட்டியிட வந்துள்ளது. நம்முடைய கஷ்டங்களை உணர்ந்து, நம்முடனே வாழுகின்றவர்கள் அதிகாரத்திற்கு வந்தால்தான், நம் கொங்குநாட்டுப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். மக்கள் நலனில் உண்மையான அக்கறையோடு அவர்கள் செயல்படுவார்கள்.

மேற்கண்ட உயரிய நோக்கங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க நமக்குத் தேவை ஓர் அரசியல் அங்கீகாரம். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அமைந்தது தான் “கொங்கு நாடு முன்னேற்றப் பேரவை” நமது கொங்குப் பகுதியின் ஒட்டுமொத்த வளர்ச்சி, நமது சமுதாய மக்களின் முன்னேற்றம் போன்றவற்றையே முக்கியமான கொள்கைகளாகவும் குறிக்கோளாகவும் கொண்டு செயல்படுகின்ற கொங்கு நாடு முன்னேற்றப் பேரவைக்கு நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்த உதவிகளையும். ஆதரவையும் நல்கிட வேண்டியது நமது கடமை நமது சமுதாய வெற்றிக்கு அது ஒரு மிகப்பெரிய பலமாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் நமது இனம் தனக்கென உருவாக்கிக்கொண்ட கொங்கு நாடு முன்னேற்றப் பேரவை வேட்பாளருக்கு, கொங்கு நாட்டு மக்கள் சிந்தித்து வாக்களித்து நமது சமுதாயத்தின் உரிமைகளைப் பெறவும் எதிர்கால வளர்ச்சியினை உறுதிப்படுத்திக்கொள்ளவும் ஒரு மிகப்பெரிய வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நன்றி வணக்கம்,

கே. ஆர்.பி.மோகன்
தலைவர்

❖❖❖❖❖

---

அடக்கமாக வாழ்பவன், இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுகிறான். - மகாவீரர்

# சக்தி மசாலா நிறுவனத்திற்கு தேசிய விருது

ஐம்பதிற்கும் மேற்பட்ட மசாலா பொடிகளையும், வகை வகையான ஊறுகாய் வகைகளையும், மாவு மற்றும் அப்பள வகைகளையும் தயாரிக்கும் சக்தி மசாலா நிறுவனத்திற்கு மத்திய அரசின், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் சார்பில் 2007 ம் ஆண்டுக்கான சிறந்த தொழில் முனைவோருக்கான தேசிய விருது கடந்த 12-02-2009 அன்று சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில் வழங்கப்பட்டது. சக்தி மசாலா நிறுவனங்களின் மேலாண்மை இயக்குநர் திரு.பி.சி.துரைசாமி, இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி ஆகியோர் தமிழக அரசின் தொழில்வணிகத் துறை ஆணையர் திரு.சந்தானம் I.A.S.அவர்களிடமிருந்து விருதை பெற்றனர். தமிழக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை முதன்மை செயலர் திரு.செல்வம் I.A.S. மற்றும் ராஜேந்திரன் I.A.S., இயக்குநர் திரு.சிவஞானம் ஆகியோர் உடனிருந்தனர். இந்த விருதிற்கான சான்றிதழுடன் கேடயம் மற்றும் ஊக்கத் தொகை ரூ. 20,000/- ஆகியன வழங்கப்பட்டன. சக்தி மசாலா நிறுவனம் ஏற்கனவே பல்வேறு துறைகளில் ஆற்றியுள்ள சாதனைகளுக்காகப் பெற்றுள்ள மத்திய மாநில விருதுகளோடு இந்த விருது மேலும் ஒரு சாதனை மகுடமாகும்.

சக்தி மசாலா நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.பி.சி.துரைசாமி, இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி ஆகியோர் மேலும் பல விருதுகளைப் பெற்று நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பல பெருமைகளைத் தேடித்தர சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖

வாய்ப்புகளை உணர்வதே அறிவுக் கூர்மையாகும். சீனா

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | ஊர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | | 25,90,207 |
| 556 | | N.வடிவேல் | சென்னை | 10,000 |
| 557 | | சக்தி மசாலா நிறுவனம் | ஈரோடு | 5,000 |
| 558 | | G.P.சுந்தரவேல் | | 2,505 |
| 559 | 1639 | M.செங்கோட்டையன் | சென்னை | 2,000 |
| 560 | 0139 | N.பொன்னுசாமி | ஈரோடு | 1,000 |
| 561 | 0140 | P.சுப்ரமணி | ஈரோடு | 1,000 |
| 562 | 0141 | M.பாலசந்தர் | ஈரோடு | 1,000 |
| 563 | | S.ஆனந்தி | மகளிர் விடுதி | 1,000 |
| 564 | | R.K.மூர்த்தி | | 1,000 |
| 565 | | J.அருணா | மகளிர் விடுதி | 1,000 |
| 566 | | C.V.தாரணி | மகளிர் விடுதி | 1,000 |
| 567 | | K.P.மகுடபதி | கரூர் | 1,000 |
| 568 | 2753 | D.தர்மலிங்கம் | கோபிசெட்டிபாளையம் | 1,000 |
| 569 | 2307 | S.ஜவகர் | கோபிசெட்டிபாளையம் | 1,000 |
| 570 | 2558 | K.பிரேம்குமார் | சென்னை | 1,000 |
| 571 | 1581 | A. கந்தசாமி | கோவை | 1,000 |
| 572 | | A.ஜெகதீஸ்வரி | மகளிர் விடுதி | 1,000 |
| 573 | 2895 | S.ஜெகநாதன் | சென்னை | 1,000 |
| 574 | | R.ரேணுகா | மகளிர் விடுதி | 1,000 |
| 575 | | V.சௌமியா | மகளிர் விடுதி | 1,000 |
| 576 | | V.ஸ்ரீசங்கீதா | மகளிர் விடுதி | 1,000 |
| 577 | 257 | G.விஸ்வநாதன் | சென்னை | 1,000 |
| | | | மொத்தம் | 26,28,712 |

தீயவற்றை வேண்டுமென்று விரும்பிச்செய்யாதே, பிறர் வேண்டினாலும் செய்யாதே -அவ்வையார்

# சூழ்நிலை

- தமிழறிஞர் பத்மபூஷண் பெ.தூரன்

குழந்தையை வளர்ப்பது ஒரு பெரிய பொறுப்பு. பெற்றோர்கள் அதை உலகத்திற்குத் தாங்கள் செய்யும் சிறந்த கடமையென்று உணர்ந்து ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். தாய்க்கு இயல்பாகவே குழந்தையைப்பற்றியும் அதன் வளர்ப்பைப்பற்றியும் பல விஷயங்கள் புலனாகும். ஆனால், அவற்றோடு திருப்தியடைந்து விடக்கூடாது. அறிவினால் கண்ட நல்ல முறைகளையும் உண்மைகளையும் தெரிந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வீட்டிலும் அக்கம்பக்கத்திலும் உள்ள பாட்டிகள் பல முறைகளைச் சொல்லுவார்கள். குழந்தையைப் பார்க்க வருகிற பந்துக்கள் பலவற்றைச் சொல்லுவார்கள். சில நல்லனவாக இருக்கும், சில குழந்தைக்குக் கெடுதல் விளைவிப்பனவாக இருக்கும். சில நம்பிக்கைகளும், பழக்கங்களும் தவறானவையாக இருக்கும். இவற்றையெல்லாம் அறிந்து நல்லனவற்றைக் கைக்கொண்டு மற்றவற்றை விலக்கிவிடப் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும்.

நாம் செய்யும் காரியங்களையும் நமது பேச்சையும் நமது உணர்ச்சிகளையும் அறிந்துகொள்ளக்கூடிய சக்தி குழந்தைக்கு இருக்கிறதென்று பாட்டி நினைப்பதில்லை. குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டே அவள் வேலைக்காரியைச் சிடுசிடுப்பாள். கெஞ்சிக் கெஞ்சி பிச்சை கேட்கும் சிறு பெண்ணை அதட்டுவாள். இப்படியே பலவகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துவாள். குழந்தை அழுதால், “டே, பூச்சாண்டி, வா; இந்தப் பிள்ளையைப் பிடித்துக்கொண்டுபோ” என்று பயங்காட்டுவாள், பூனைபோலக் கத்துவாள்.

எல்லாப் பாட்டிகளும் இப்படிச் செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. செய்கிறவர்களும் தாங்கள் செய்வதில் ஒன்றும் தவறில்லை என்று எண்ணித்தான் செய்கிறார்கள். ஆனால் குழந்தையின் இள உள்ளத்தில் இவைகளெல்லாம் ஆழ்ந்து பதிகின்றன. குழந்தைக்குப் பயங்காட்டுவது பெருங்குற்றம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. “குழந்தையின் முன்னால் எவரிடத்திலும் கோபக்குறியைக் காட்டாதே, வசவுவார்த்தை பேசாதே, உனது குறைபாடுகளெல்லாம் அதன் மனத்திலும் பதியும்படி செய்யாதே” என்பது உள்ளநூலின் கட்டளை.

பலர் குழந்தையைப் பார்க்க வருகிறார்கள். அவர்களுக்கு அதை எடுத்து வாயில் முத்தமிட்டால்தான் திருப்தி. ‘இது தவறான செய்கை’ என்று மனத்தத்துவப் பண்டிதர்களும், வைத்தியர்களும் ஒருங்கே கண்டிக்கிறார்கள். ‘வாயில் பல வகையான கிருமிகள் இருக்கும். அவை குழந்தைக்கு நோய் உண்டாக்கும்’ என்றால் பெரியவர்கள் சிரிக்கிறார்கள். ‘‘என்னவோ அம்மா, நாங்களுந்தான் உங்களையெல்லாம் வளர்த்தோம். ஒரு கிருமியைக் கண்டதில்லை. ஒரு நோயைக் கண்டதில்லை” என்று நீட்டுவார்கள்.

நல்ல செயல்களை நீயே முன்னின்று செய் -அவ்வையார்

அவர்கள் மனம் நோகாதபடி சாமர்த்தியமாக நாம் நடந்து கொள்ளவேண்டும் . அதே சமயத்தில் நல்ல முறையையும் விட்டுக்கொடுத்து விடக்கூடாது, சிரமமான காரியந்தான். இது சம்பந்தமாக நான் பல தடவைகளில் பலருடைய மனவருத்தத்திற்கு ஆளாகியிருக்கிறேன். தாய்க்குக் கஷ்டம் இன்னும் அதிகமாக இருக்கும். இருந்தாலும் குழந்தையிடம் நமக்கு உள்ள உண்மையான அன்பினால் இவற்றையெல்லாம் எளிதில் சமாளித்துக்கொள்ளலாம்.

தாய் நல்ல விவேகம் உடையவளாக இருக்கவேண்டும். குழந்தை உள்ளத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். தன்தோழி ஒருத்தி அவள் குழந்தையை ஒருமாதிரி வளர்ப்பதைப் பார்த்து, அது அக்குழந்தைக்குச் சரிப்படுகிறதென்று அதே முறையைத் தானும் அநுஷ்டித்தால் போதும் என்று நினைத்து விடக்கூடாது. ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனித்தன்மை வாய்ந்தது என்பதைத் தாய் நன்கு உணரவேண்டும். அப்பொழுதுதான் மனத்தத்துவ சாஸ்திரம் அவளுக்குத் துணை புரியும்.

உலகத்தில் எந்தச் சிறிய தொழில் செய்பவனும் அதைப்பற்றிப் படித்துப்பட்டம் பெற வேண்டி இருக்கிறது. ஆனால் குழந்தையை வளர்க்கும் மிக முக்கியமான தொழிலை யாரும் செய்யலாம் என்று சுதந்திரம் இருக்கிறது. பெற்றோர் ஆவதற்குமுன் ஆண் பெண்களுக்கு அதற்கு வேண்டிய அறிவு இருக்கிறதா என்று முடிவு செய்த பின்னரே அனுமதி கிடைக்கக்கூடிய காலம் வரவேண்டும்.

பிறப்பினால் குழந்தைக்குப் பல தன்மைகள் அமைகின்றனவென்றும், வளர்ப்பினால் பலதன்மைகள் அமைகின்றனவென்றும் உள்ள ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகிறார்கள். இவைபற்றி அவர்களுக்குள்ளேயே மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. பிறப்பிலேயே நன்மைகள் அமைவதில்லை என்கிறார்கள் சிலர். சிலர் பிறப்பிலும் அமையும், வளர்ப்பிலும் அமையும் என்கிறார்கள். ஆனால் வளர்ப்பினால் தன்மைகள் பல அமைவதை யாரும் மறுப்பதில்லை. குழந்தையின் முதல் ஐந்து வருஷங்களில் அதன் வளர்ப்புமுறை, அநுபவம், சூழ்நிலை முதலியவைகள் அநேகமாக வாழ்க்கையின் போக்கையே நிர்ணயித்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். இதில் அபிப்பிராய வேற்றுமையே இல்லை. இதனால் குழந்தையின் வளர்ப்பு மிகக் கவனத்தோடு செய்ய வேண்டிய காரியம் என்று தெரிகிறது.

குழந்தையின் உள்ளத்தைப்பற்றிய உண்மைகளை அறிந்து அதற்கு ஏற்றவாறு வளர்ப்பதற்குத் திட்டம் போடுவது மட்டும் போதாது. அதைவிடப் பெற்றோரின் உள்ளப் பான்மையும், அவர்கள் குழந்தையின் எதிரில் நடந்துகொள்ளும் விதமுமே முக்கியமானவை. தாயும் தகப்பனும் குழந்தைக்குப் பல விஷயங்களை எடுத்துச் சொல்லலாம். பல திட்டங்கள் வகுக்கலாம். அவை அவ்வளவு முக்கியமானவை அல்ல. அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள், எப்படிக் குழந்தையிடம் நடந்துகொள்கிறார்கள் என்பனவே முக்கியம். இவற்றைப் பொறுத்தே அவர்கள் தங்கள் கடமையில் வெற்றியும் தோல்வியும்

மனம் அறிய உண்மையாக வாழ்வது நேர்மையான வாழ்வாகும் - அவ்வையார்

அடைகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனித்தன்மை வாய்ந்ததல்லவா? அதனால் அது தன் தன்மைக்கு ஏற்ப இயல்பாகத் தானே வளரவேண்டும். நமது திட்டத்தின்படி வளரவில்லையே என்றோ, சீக்கிரம் வயது வந்தவர்களைப்போல நடந்துகொள்ளவில்லையே என்றோ கவலைப்படுவது குழந்தைக்குத் தீங்கு விளைவிப்பதாகும்.

வயதானவர்களுக்கு அற்பமாகத் தோன்றும் பல விஷயங்கள் குழந்தைக்கு அதி முக்கியமாகத் தோன்றும். பெரியவர்கள் அதிமுக்கியமென்று நினைப்பதைக் குழந்தை அப்படிக் கருதாமல் இருக்கலாம். சரோஜா ஒரு மரக்கட்டையை வைத்துக்கொண்டு அதைத் தாலாட்டிப் பாராட்டுகிறாள். அதற்குப் பால் கொடுக்கிறாள். அது அவளுக்குப் பெரிய விஷயம். ஆனால் அதே சமயத்தில் கைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வது அவளுக்கு முக்கியமாகத் தோன்றுவதில்லை.

சுத்தமாக இருக்கப் பழக்குவது வற்புறுத்தலினால் ஏற்படக் கூடாது. குழந்தை கையில் மண்ணைப் பிசைந்து கொண்டு வருகிறதே என்று சீறி விழவுங்கூடாது. இவைகளெல்லாம் அதற்குத் தீமையையே விளைவிக்கும்.

ஒன்றுபோலவே எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியாக விரைவில் நல்ல ஒழுக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆத்திரப்படுவதும் அறிவுடைமையாகாது. சில பெற்றோர்கள் ஒரு குழந்தையிடமுள்ள குறையை எடுத்துக்காட்டி மற்றக்குழந்தைகளுடன் அதை ஒப்பிட்டுத் தாழ்வாகப் பேசுகிறார்கள். அதனாலும் தீங்கே விளைகிறது. எல்லாக் குழந்தைகளையும் ஒரே மாதிரி உயரமுள்ளனவாக வளரச்செய்ய முடியுமா? ஒவ்வொன்றும் ஒரே மாதிரி வருஷம் ஒன்றுக்கு இரண்டு அங்குலம் வளரவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? இது எவ்வளவு பேதைமையோ அதேபோலத்தான் வேறு பழக்கங்களிலும் ஒரே மாதிரி வேகத்தை எதிர்பார்ப்பதும்.

பெற்றோர்களின் கவலை, உணர்ச்சி முதலியவைகளைக் குழந்தை நன்கு அறிந்து கொள்கிறதென்று முன்பே கண்டோம். ஆதலின் அவர்களுடைய வாழ்க்கை திருந்திய முறையில் அமைந்ததாக இருக்கவேண்டும். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சரியான உள்ள ஒற்றுமை இருக்கவேண்டும். குடும்ப நிர்வாகம் இருவருடைய பரஸ்பர அன்பினால் நடைபெற வேண்டும். குழந்தைக்கு அன்பும் அந்நியோந்நியமும் நிறைந்த சூழ்நிலையை அவர்கள் தங்கள் நடத்தையால் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதுவே அவர்கள் வகுக்கும் திட்டங்களைவிட அதிகமாகக் குழந்தையின் வளர்ச்சியில் உதவி புரிகிறது.

❖❖❖❖

அன்புள்ள இதயம் இன்பத்தின் ஊற்று; அதை சுற்றியுள்ளவர்களின் முகங்களெல்லாம் புன்னகையுடன் விளங்கும் - வாஷிங்டன் இர்வின்

# பயோடெக்னாலஜி

மரபணுக்கள் தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்து ஆய்வுகளுக்காக உயிரியலில் அண்மைக்காலமாக வளர்ந்து கோலோச்சும் புதிய துறை பயோடெக்னாலஜி, இந்த நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு அடுத்தபடியாக வளர்ந்து வரும் முக்கியத் துறை இது.

ஆந்திராக்ஸ் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தது பயோ டெக்னாலஜி ஆய்வாளர்கள்தான். எச்.ஐ.வி. தொற்றுக்கு மருந்து கண்டுபிடிக்க வேண்டுமா? புற்று நோய்க்கான மருந்தா? இவற்றிற்கான எதிர்கால சாத்தியங்கள் பயோ டெக்னாலஜி ஆராய்ச்சியின் கையிலேயே இருக்கிறது என்றால் அது மிகையில்லை.

பயோ டெக்னாலஜியின் இன்னொரு பரிமாணம், ஹியூமன் ஜீனோம் புராஜக்ட். மனித உடலில் அடங்கியுள்ள மரபணுக்களையும் அவற்றின் தனிப்பண்புகளையும் அடையாளம் காணும் இந்த ஆராய்ச்சிப் பணி மூலம் தீராத நோய்களையும் முளையிலேயே கண்டறிந்து தடுத்துவிட முடியும் மட்டுமல்ல விவசாயம், மருந்துப்பொருள்கள், பதனீட்டு உணவுகள், ஜவுளித்துறை என்று இதன் பயன்பாடு விரிந்து வருகிறது. எனவே, இது குறித்த படிப்புகள் உலகெங்கிலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. அதற்கு இந்தியாவும் விதிவிலக்கு இல்லை.

. உயிரியல் ஆய்வுத்துறையில் ஆர்வமிக்க மாணவர்களுக்கு ஏற்ற படிப்பு இது. தற்போது பிளஸ் டூ படித்த மாணவர்கள்கூட பயோ டெக்னாலஜி தொடர்பான படிப்புகளை இளநிலை பட்ட வகுப்புகளிலேயே படிக்கலாம்.

. அறிவியல் படிப்புகளைப் படித்த மாணவர்கள் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் பயோ டெக் தொடர்பான சிறப்புப் பிரிவுகளை எடுத்துப் படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

. பயோ டெக்னாலஜி படித்த மாணவர்களுக்கு பார்மாசூட்டிக்கல் நிறுவனங்கள், வேளாண் தயாரிப்பு நிறுவனங்கள், கால்நடை மருத்துவ அறிவியல் நிறுவனங்கள், உணவு பதனீட்டு நிறுவனங்கள், ஜவுளித்துறை அமைப்புகள், பயோ எரி பொருள் உற்பத்தி நிறுவனங்கள், பயோடெக் ஆய்வு நிறுவனங்கள் போன்றவற்றில் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

. சமீப காலமாக விப்ரோ, டிசிஎஸ்., இன்போசிஸ் போன்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் கூட பி.டெக். பயோ டெக்னாலஜி மாணவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்கின்றன.

---

பிரார்த்தனை என்து கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல, அது ஆன்மாவின் ஏக்கமாகும் - காந்திஜி

. இந்தியாவில் பயோகான் உள்பட நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்கள் பயோடெக் துறையில் இறங்கி வெற்றிக்கொடி நாட்டி வருகின்றன. மருந்தியல் துறையும் பயோடெக் துறையும் இணைந்த செயல்பாடுகள் அதிகரித்து வருவதையடுத்து இத்துறையின் வேலை வாய்ப்புகள் பெருமளவு அதிகரித்து வருகிறது.

**எங்கு படிக்கலாம் ?**

பயோ டெக்னாலஜி தொடர்பான படிப்புகளைப் படிக்க சில கல்வி நிறுவனங்கள் :

. எய்ம்ஸ், புது டில்லி, எம். பயோடெக்

. யூனிவர்சிட்டி ஆஃப் ஹைதராபாத், எம்.டெக். மெடிக்கல் பயோ டெக்னாலஜி

. சென்டர் ஃபார் பயோ டெக்னாலஜி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், தில்லி, எம்.எஸ்.சி.பயோ டெக்னாலஜி

. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் எம்.எஸ்.சி அக்ரிக்கல்சுரல் பயோடெக்னாலஜி

. இந்தியன் அக்ரிக்கல்சுரல் ரிசர்ச் இன்ஷ்டிட்யூட் தில்லி எம்.எஸ்.சி. அக்ரிக்கல்ச்சுரல் பயோ டெக்னாலஜி

. ஐ.ஐ.டி. தில்லி, எம்.டெக், பயோ கெமிக்கல் இன்ஜினியரிங் அண்ட் பயோ டெக்னாலஜி, எம்.எஸ். (ரிசர்ச்) பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் அண்ட் பயோ டெக்னாலஜி

. ஐ.ஐ.டி. மும்பை : எம்.எஸ்.சி. பயோ டெக்னாலஜி

. கோவா பல்கலைக்கழகம், கோவா : எம்.எஸ்.சி. மரைன் பயோ டெக்னாலஜி

. புனே பல்கலைக்கழகம், புனே : எம்.பி.ஏ., பயோ டெக்.

. ஜிப்மர், புதுச்சேரி, எம்.எஸ்.சி. மெடிக்கல் பயோ கெமிஸ்ட்ரி

. தமிழகத்தில் இருபதுக்கு மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளிலும், சில நிகர்நிலைப்பல்கலைக்கழகங்களிலும் பி.டெக் பயோடெக்னாலஜி படிக்லாம். சென்னையில் உள்ள ஏ.சி. தொழில்நுட்பக்கல்லூரியிலும், கோவை அரசு தொழில்நுட்பக்கல்லூரியிலும் பி.டெக் இன்டஸ்ட்ரியல் பயோ டெக்னாலஜி படிக்கலாம். சென்னை ஐ.ஐ.டி. யிலும், திருச்சி என்.ஐ.டியிலும் பி.டெக் பயோ டெக்னாலஜி படிக்கலாம். மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் உள்ளிட்ட முக்கியக்கல்வி நிறுவனங்களில் பயோ டெக்னாலஜி தொடர்பான படிப்புகளைப் படிக்க முடியும்.

❖❖❖❖

முன்னின்று புகழ்பவனும், பின்னாலிருந்து தூண்டிவிடுபவனும் ஒரே தன்மையாளர்தான். - டென்னிசன்

# வாழ்த்துகிறோம்



சக்தி மசாலா நிறுவன இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி அவர்களுக்கு **MAKKAL AWARD 2008** என்ற விருது 12-01-2009 அன்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு அன்புமணி ராமதாஸ் அவர்கள் வழங்குகிறார். உடன் மக்கள் தொலைக்காட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் சக்தி மசாலா மேலாண்மை இயக்குநர் திரு. P.C.துரைசாமி

சக்தி மசாலா நிறுவனத்தின் இயக்குநர் திருமதி சாந்தி பொன்னுசாமி அவர்களுக்கு சிறந்த வணிகவியலாளர் விருது மக்கள் தொலைக்காட்சி வழங்கியது

உலகத் தமிழர்களின் இல்லத் திரையாகத் திகழும் மக்கள் தொலைக்காட்சி, 2008ம் ஆண்டிற்கான பல்வேறு சாதனையாளர்களை அடையாளம் கண்டு மக்கள் விருதுகளை வழங்கியது. இந்த விழா 12.1.2009 அன்று சென்னையில் நடைபெற்றது. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் ச.ராமதாஸ் தலைமையேற்க நடுவண் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் விருதுகளை வழங்கினார்.

தரமான தயாரிப்புகளை மக்களுக்கு சரியான விலையில் வழங்குவது; சமுதாய நோக்கோடு வணிக நிறுவனங்கள் செயலாற்றுவது; மாற்றுத் திறன் கொண்டோருக்கு வேலை வாய்ப்பளிப்பது போன்றவற்றில் தனக்கென தனிஇடம் பிடித்துள்ள சக்தி மசாலா நிறுவனத்தின் இயக்குநர் திருமதி சாந்தி துரைசாமி அவர்களுக்கு சிறந்த வணிகவியலாளர் விருது வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. இந்த விருதினை மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் திருமதி சாந்தி துரைசாமி அவர்களுக்கு வழங்கினார். சக்தி மசாலா நிறுவனங்களின் மேலாண்மை இயக்குநர் திரு. பி.சி.துரைசாமி அவர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சாதனைகள் பல புரிந்து, விருது பெற்று கொங்கு சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்துவரும் திருமதி சாந்தி துரைசாமி அவர்களுக்கும், சாதனையாளர் திரு. பி.சி.துரைசாமி அவர்களுக்கும் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

முயற்சியே தெய்வம். - சமர்த்த ராமதாசர்

# சமைத்துப் பாருங்கள்

திருமதி கோமதி செல்வராஜ், B.E.,

## சைனா கிராஸ்

<u>தேவையான பொருட்கள்</u>

| | |
|---|---|
| சைனா கிராஸ் | 10 கிராம் (சுகர் அகர்) |
| சுருக்கிய பால் | 1 டின் |
| பால் | 3 டின் |
| சர்க்கரை | ½ கப் |
| கொக்கோவா தூள் | 2 டேபிள் ஸ்பூன் |
| வெணிலா சாரம் | ½ டேபிள் கோப்பை |
| அழகுபடுத்த | |
| காட்பரிஸ் | |
| சாக்கலேட் | 1 பார் (சிரேட்டடு) |

**செய்முறை**

சைனா கிராசை நன்கு கழுவி, 15 நிமிடங்கள் தண்ணீரில் ஊற வைக்கவும். பாலை 10 முதல் 15 நிமிடங்கள் வரை நன்கு காய்ச்சவும். பாலில் உள்ள தண்ணீர் முழுவதும் ஆவியாகிவிடும். பின்னர், சைனா கிராசை நன்கு அழுத்தி பாலில் சேர்க்கவும். பாலில் முழுவதும் கரையும் வரை காய்ச்சவேண்டும். சுருக்கிய பாலையும் சர்க்கரையையும் இதில் சேர்த்து மேலும் 5 நிமிடங்களுக்கு நன்கு காய்ச்ச வேண்டும். இந்தக் கலவையை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஒரு பகுதியில் கொக்கோவா தூளைச்சேர்த்து நன்கு கலந்த பிறகு, ஒரு தட்டில் ஊற்ற வேண்டும். 5 முதல் 10 நிமிடங்கள் வரை அப்படியே வைத்திருக்க வேண்டும். அது நன்கு கெட்டியாக உறுதிப்பட்டுவிடும். அவ்வாறு உறுதிப்படும் தறுவாயில் முந்திரிப்பருப்புகளை அதன் மீது தூவ வேண்டும். அதே நேரத்தில், இன்னொரு பகுதிக்குள் வெணிலா சாரத்தைச்சேர்த்து நங்கு கலக்கி, மெதுவாக உறுதிப்பட்டிருக்கும் சாக்கலேட் பகுதியின் மேல் ஊற்ற வேண்டும்.

பின்னர் ரெபிரிஜிரேட்டரில் வைத்து நன்கு கெட்டியாகும்படி வைத்துவிட வேண்டும். அது குளிர்ந்த பிறகு வைரம் போல் சிறுசிறு துண்டுகளை வெட்டிக்கொள்ள வேண்டும்.

சைனா கிராஸ் இளனியைப்போன்று குளுமையானது. குறிப்பாக வெயில் காலங்களில் சாப்பிடுவதற்கு உகந்ததாகும்.

❖❖❖❖❖❖❖❖❖

மகத்தான செயல்களின் மூலமே பேரின்பம் தோன்றுகிறது. - ஸி.என். போவீஸ்



## Dr. M.N. பொன்னுசாமி Ph.D., D.Sc.,

நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் Dr. M.N. பொன்னுசாமி அவர்களுக்கு கடந்த 19-01-2009 அன்று நடைபெற்ற சென்னை பல்கலைக்கழகத்தின் 151 வது பட்டமளிப்பு விழாவில் D.Sc,. (Doctor of Science) என்ற உயரிய பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

உயிர் இயற்பியல் (Bio-Physics) துறையில் பெரிய மூலக்கூறுகளின் தன்மை (Macro Molecules Structure) பற்றி ஆராய்ந்து இவர் அறிவியல் முனைவர் (D.Sc) பட்டம் பெற்றுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் இவர் இதுவரை 25க்கும் மேற்பட்ட Ph..D., மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். 200க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல் துறையில் இவரது சாதனைகளைப் பாராட்டி தமிழக அரசு 2003ம் ஆண்டின் சிறந்த விஞ்ஞானி விருதை வழங்கியுள்ளது. நமது சங்கம் 2004ம் ஆண்டு கொங்கு சாதனையாளர் விருதை வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக இயற்பியல் துறையில் இதுவரை மூவர் மட்டுமே இந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளனர். நமது சமுதாயத்தில் முதன் முறையாக இவர் இப்பட்டத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்கு நாட்டில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து, இன்றைக்கு உலகளவில் தனது துறையில் சாதனை படைத்து நாட்டிற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துள்ள காடை கூட்டத்தைச் சேர்ந்த Dr. M.N. பொன்னுசாமி அவர்களுக்கு சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖

உற்சாகத்துடனும், இன்முகத்துடனும் சிறுசிறு தியாகங்கள் செய்வதைப் பொறுத்திருக்கிறது, மணவாழ்க்கையின் இன்பம். - ஷெல்டன்

# திரு. எஸ்.எஸ்.ராஜசேகர் அவர்களின் சமூகத் தொண்டு



– ஒரு சாளரப் பார்வை

அமரர் பாரத் ரத்னா திரு.சி.சுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் திரு.எஸ்.எஸ்.ராஜசேகரை அண்மையில் ஓர் அங்கீகாரம் வந்தடைந்துள்ளது. கச்சா எண்ணை இயற்கைவாயு நிறுமத்தின் (Oil and Natural Gas Corporation - ONGC) இயக்குநர் குழுமத்தின் உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகின் புகழ் பெற்ற Fortune இதழின் 2007ம் ஆண்டின் உலகின் மிகவும் போற்றப்பட்ட நிறுமங்கள் பட்டியலில் இடம் பெற்ற முதல், ஒரே இந்திய நிறுமம் என்ற பெருமை ONGC யைச் சாரும், 2007-08 நிதி ஆண்டில் ONGC ன் வருமானம் ரூ. 61, 542 கோடி; நிகர லாபம் ரூ. 16,701 கோடி – இது எத்துணை பெரிய நிறுமம் என்பது இந்த விவரக் குறிப்பிலிருந்து தெளிவாகும்.

ONGC ன் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர் பொறுப்பு மட்டுமின்றி, பல முக்கிய குழுக்களிலும் (Committee) திரு. ராஜசேகர் அங்கம் வகிக்கிறார். அலுவலர் ஊதியக்குழு, மனித வள மேம்பாட்டுக்குழு, உடல் நலப் பாதுகாப்பு / சுற்றுச்சூழல் மேலாண்மைக் குழு, பங்குதாரர்கள் / முதலீட்டாளர்கள் குறை மேல்முறையீட்டுக்குழு போன்ற குழுக்கள் இவை. இந்த மகத்தான பொறுப்பில் வெற்றிகரமான சாதனை புரிய திரு. ராஜசேகருக்கு நம் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

வேதியியல் பொறியியலில் (Chemical Engineering) பட்டம் பெற்ற திரு.ராஜசேகர் கடந்த 30 ஆண்டுகளாகப் பல துறைகளில் சாதனை புரிந்துள்ளார். வணிகம் / முதலீட்டு அறிவுரை வழங்குதல், பொறியியல் பிரச்சினைத் தீர்வு, நில மேம்பாடு / கட்டட வளர்ச்சி / வணிகம், கிராமப்புற வளர்ச்சி, சமூக மேம்பாடு சார்ந்த பன்முகப்பட்ட பணிகள்.

தற்சயம் பல நிறுவனங்களில் முக்கியப் பொறுப்பு வகித்து வருகிறார், திரு.ராஜசேகர். சென்னை அறிவுரை வழங்கு நிறுவனத்தில் (Chennai Consultancy Service Pvt. Ltd.,) இயக்குநர், கொரமாண்டல் இஞ்சினீரிங் கம்பெனியில் (முருகப்பா குழுமத்தில் ஓர் அங்கம்) இயக்குநர், தமிழக அரசின் மகளிர் மேம்பாட்டு நிறுமத்தில் இயக்குநர்,சென்னை மேலாண்மைக்கழகத்தின் செயற்குழு உறுப்பினர், தமிழக அரசின் கால்நடை மேம்பாட்டு முகமையின் செயற்குழு உறுப்பினர், ஆந்திர வணிகர் கழகத்தின் முன்னைத் தலைவர், வங்கிகள் கிராமப்புற மேம்பாட்டு நிலையத்தின் ஆளுகைக் குழு உறுப்பினர்,சென்னை பாரதிய வித்யாபவன் செயற்குழு உறுப்பினர், Exnora International ன்

கவலையைவிட மிகவும் கொடியது, ஒருவரிடம் உள்ள சந்தேகமே - டிவாலோஸ்

முன்னைத் தலைவர், இன்றைய ஆலோசகர், எம்.எஸ்.சாமிநாதன் ஆய்வு நிறுவனத்தின் ஆளுகைக் குழு உறுப்பினர், உடல் ஊனமுற்றோர் பணி நிறுவனம் அமர் சேவா சங்கத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர்.

சமுதாய நலப்பணிக்களத்தில் திரு.ராஜசேகரின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை. ரோட்டரி இயக்கத்தின் குடையின் கீழ் அவர் ஆற்றி வரும் பணிகள் பல களன்களைத் தழுவி உள்ளன. சென்னை கிழக்கு ரோட்டரி சங்கத்தின் முன்னைத் தலைவராகவும், மேலும் பல பொறுப்புகளிலும் அவரது பங்களிப்புகள் : மாநகராட்சிப் பள்ளிகளின் கல்வி / அடிப்படை வசதித் தரத்தை உயர்த்துதல், சுற்றுச் சூழல் விழிப்புணர்வு / அறிவியல் சார்ந்த நீர் மேலாண்மை / உணவுப் பாதுகாப்பு / வேளாண்மை சார்ந்த கருத்தரங்குகள், பயிலரங்குகள்; 12 கிராமங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வசதி, உடல் ஊனமுற்ற 1200 சிறார்களுக்கு தேசிய அளவிலான சிறப்பு ஒலிம்பிக், சமுதாயக்கல்லூரி நிறுவி, 500 ஏழைப்பெண்களுக்கு தொழில்சார் கல்வி அளித்தல் (90 சதவிகித வேலைவாய்ப்பு).

பெரியவர் சி.எஸ்.தனது 90வது ஆண்டு நிறைவின் போது, விழாக்களைத் தவிர்த்து, பரந்துபட்ட கிராம முன்னேற்றத்திற்கு அடிகோலும் குறிக்கோள்களுடன் தேசிய வேளாண் நிறுவனம் (National Agro Foundation - NAF) என்ற அமைப்பை நிறுவினார். அவரது மறைவுக்குப் பின் டாக்டர் அப்துல் கலாம் இந்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார், திரு.ராஜசேகர் கடந்த 8 ஆண்டுகளாக NAF ன் மேலாண்மை அறங்காவலராக அரிய பங்களிப்பாற்றி வருகிறார்.

NAF 60 கிராமங்களை சுவீகரித்துக்கொண்டு, இக்கிராமங்களில் வேளாண்மை வளர்ச்சி, கால்நடை மேம்பாடு, சுய உதவிக்குழுக்கள் அமைத்தல் / பேணி வளர்த்தல்; வருமானம் ஈட்டும் சுய தொழில் முயற்சிகள், அடிப்படைக்கல்வி / சுகாதாரம்; அறிவியல் / தொழில்நுட்பம் தழுவிய பயிற்சி அளித்தல் போன்ற பன்முகப்பட்ட பணிகளைச் செய்து வருகிறது. NAF பணியின் குவிப்பு முனை வறுமைக்கோட்டுக்குக் கீழே உழலும் கிராம மக்கள், இந்நிறுவனத்தின் பணியின் வாயிலாக வேளாண் / கால்நடை உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் விளைந்துள்ளது. இந்த முயற்சியில் திரு.ராஜசேகரின் பங்களிப்பு கணிசமானது. தன் வாழ்வின் அஸ்தமன காலத்தில் நாட்டுக்கு பெரியவர் சி.எஸ்–அளித்துச் சென்ற கொடையாம் NAF நிறுவனப் பணியை, தன் தந்தையின் நினைவுக்கு ஓர் அஞ்சலியாக, அவரது மகன் சிரமேற்கொண்டு செவ்வனே நிறைவேற்றி வருகிறார் என்பது மன நெகிழ்வூட்டும் செய்தி.

திரு.ராஜசேகரின் சமூகப் பணி வாழ்வு மேலும் செழுமையுடன் துலங்க இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்.

❖❖❖❖❖

லட்சியமில்லாத வேலை எண்ணெய் இல்லாத விளக்குக்குச் சமம் - யோகி வேமன்னா

# முதியவர்களுக்கு வீட்டிலேயே சிகிச்சையளிக்கும் அரிய திட்டம்

டாக்டர். வ.செ.நடராசன்
முதியோர் மருத்துவர், தலைவர்
மூத்த குடிமக்கள் மன்றம், சென்னை

முதியவர்களின் வாழும் நாட்கள் அதிகரித்துக் கொண்டே வரும் இத்தருணத்தில் அவர்கள் பல நோய்களுக்கும் ஆளாக நேர்கிறது. முதுமையின் விளைவால் கீழே விழுதல், எலும்பு முறிவு, பக்கவாதம், மாரடைப்பு, மனக்குழப்பம் போன்ற பல நோய்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. அச்சமயத்தில் அவர்களுக்கு உடனே மருத்துவ வசதி கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. உடனே சிகிச்சை அளிப்பதன் மூலம் அவர்களுடைய தொல்லைகளிலிருந்து விரைவில் நிவாரணம் கிடைக்கிறது. உதாரணம் : மாரடைப்பு, மனக்குழுப்பம் அதிக காய்ச்சல், மேலும் உரிய நேரத்தில் ஆலோசனை வழங்கினால் வீட்டிலோ அல்லது மருத்துவமனையிலோ சிகிச்சை பெற வசதியாக இருக்கும். வீட்டில் உள்ளவர்களுக்கும் இது பெரிய ஆறுதலைத் தரும். முன்பே இருந்த “குடும்ப டாக்டர் முறை” இப்பொழுது அரிதாகி விட்டது. முதியவர்களுக்கு வீட்டிலேயே அவசர காலத்தில் சிகிச்சையளிக்க பெரும்பாலும் டாக்டர்கள் முன் வருவது இல்லை. அவசர வாழ்க்கை, காலம் இன்மை, போக்குவரத்து நெருக்கடி போன்ற காரணங்களால் டாக்டர்கள் முதியவர்கள் வீட்டிற்குச் செல்ல முடிவது இல்லை. மேலும் நடக்க முடியாத நிலையிலுள்ள (மூட்டுவலி, பக்கவாதம்) முதியவர்கள் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற மிகவும் சிரமப்படுகிறார்கள். நிதி வசதி குறைவினாலும், உறவினர்களின் நேரமின்மையாலும் அவர்களால் மருத்துவமனைக்குச் சென்று தக்க சிகிச்சை பெற முடியாமல் போய்விடுகிறது. இதனால் அவர்களின் நோயும் தீவிரமடைகிறது.

முதியவர்களுக்கு அவசர காலத்தில் சிகிச்சையளிப்பதற்காகவும், நடக்க முடியாத நிலையிலுள்ள முதியவர்களுக்கு கால முறைப்படி சிகிச்சை பெறுவதற்காகவும், ‘வீட்டிலேயே சிகிச்சை’ என்ற ஒரு அரிய திட்டத்தை மூத்த குடிமக்கள் மன்றம் இந்தியாவிலேயே முதன் முதலாக 17/02/2009 அன்று தொடங்கியது. தொடக்கத்தில் 35 டாக்டர்கள், 11 இயன் முறை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் 5 உளவியல் நிபுணர்கள் இத்திட்டத்தில் பங்கேற்றார்கள்.

**இத்திட்டத்தின் நடைமுறை விபரங்கள்** :-

- ஒரு குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் முதியவர்களுக்கு, அப்பகுதியிலுள்ள டாக்டர் தான் சிகிச்சையளிக்க வருவார்.
- முதியவர் ஒருவர் வீட்டில் இருந்தால், அவர் நல்ல நலத்துடன் இருந்தாலும் இத்திட்டத்தில் சேர்ந்துள்ள அப்பகுதி டாக்டரை அணுகி அம்முதியவரைப்பற்றி முன்பே தெரிவிப்பது நல்லது.

மௌனம் அறிவிற்கு அழகு, பொறுமை திறமைக்கு ஏற்றது. - காளிதாசன்

- இத்திட்டத்தில் சேர்ந்துள்ள டாக்டர்களின் முகவரி, தொலைபேசி எண் மற்றும் பார்க்கும் நேரங்களை மூத்த குடிமக்கள் மன்றம் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
- சுமார் 70 வயதான முதியவர்கள் அல்லது நடக்க முடியாத நிலையிலுள்ள 60 வயது நிரம்பிய முதியவர்கள் மட்டும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம்.
- அவசர சிகிச்சைக்கு டாக்டரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் அவர் முடிந்தளவுக்கு உடனே வீட்டிற்கு வந்து சிகிச்சையளிப்பார் அல்லது தொலைபேசி மூலமே உடனடி நிவாரணம் பெற ஆலோசனை தருவார். அவசர சிகிச்சைக்கு டாக்டர் நேரில் வரவேண்டும் என்றால், நோயாளிகளே போக்குவரத்து ஏற்பாடு செய்ய வேண்டும்.
- அவசர சிகிச்சை தேவையில்லாத நோயாளிகளுக்கு முன் கூட்டியே டாக்டரை அணுகி வீட்டிலேயே வந்து பார்க்க முன் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.
- இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்பட வைப்பது முதியவர்களை கவனிக்கும் குடும்பத்தாரிடம் தான் உள்ளது.
- அவசர சிகிச்சை அழைப்பை மிகவும் தேவைப்பட்டால் மட்டும் தான் செயல் படுத்த வேண்டும். அப்போது தான் உண்மையான பலன் கிட்டும். தேவையில்லாமல் சிறு, சிறு தொல்லைகளுக்கு எல்லாம் டாக்டரை அணுகினால் அவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காமல் போய்விடும்.
- இத்திட்டத்தின் மூலம் கடந்த ஒரு வருடத்தில் சுமார் 300 முதியவர்கள் வீட்டிலேயே சிகிச்சை பெற்று பயனடைந்து இருக்கிறார்கள்.
- இத்திட்டத்தில் ஆண்களை விட பெண்களே அதிகம் பயனடைந்தார்கள்.
- ஒரு வருடத்தில் 55 டாக்டர்கள், 18 இயன் முறை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் 2 உளவியல் நிபுணர்கள் இத்திட்டத்தில் பங்கேற்று இருக்கிறார்கள்.
- ஆரம்பத்தில் சென்னை மாநகரத்தில் 20 இடங்களில் இத்திட்டம் செயல்பட்டது. இப்பொழுது விரிவாக்கம் செய்து 34 இடங்களில் இத்திட்டம் செயல்படுகிறது.
- இன்னமும் சில இடங்கள் உதாரணம் : கொளத்தூர், ரெட் ஹுல்ஸ், தண்டையார்பேட்டை, ராயபுரம், திருவெற்றியூர் மற்றும் போரூர் போன்ற இடங்களில் விரிவாக்கம் செய்ய உள்ளோம்.

**அழைப்பின் வகைகள்** :

- மிக அதிக அளவு அவசர அழைப்புகளே அதிகம், உதாரணத்திற்கு மாரடைப்பு, மனக்குழப்பம், அதிக காய்ச்சல், பக்கவாதம் போன்றவை.
- அவசரம் அல்லாத அழைப்புகள், உதாரணத்திற்கு முடியாத நிலையிலுள்ள (மூட்டு வலி, பக்கவாதம்), மனக்குழப்பம் போன்ற அழைப்புகளும் கவனிக்கப்படுகிறது.

**இறப்பு சான்றிதழ்** (Death Certificate)

வீட்டிலேயே சிகிச்சையளிக்கும் திட்டத்தில் முதியோர் இறந்து விட்டால் அவர்களுக்கு இறப்பு சான்றிதழ் உடனே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இறப்பு சான்றிதழ்

அளவில்லாத ஆசை, நமது குணங்களையெல்லாம் அழித்துவிடும் - மகாவீரர்

வழங்க குறைந்த கட்டணமோ அல்லது முடிந்தால் இலவசமாகவோ வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதை இத்திட்டத்தில் டாக்டர்கள் அனைவரும் மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளனர். இதுவரை ஒன்பது இறப்புச் சான்றிதழ்களை டாக்டர்கள் வழங்கி உள்ளார்கள்.

**முதியோர்களுக்கு செவிலியர்கள் சேவை செய்யும் திட்டம்** :

முதியோர்கள் பல நோய்களுக்கு ஆளாக நேர்கிறது. முதுமையின் விளைவால் கீழே விழுதல், எலும்பு முறிவு, பக்கவாதம், மனக்குழப்பம் போன்ற பல நோய்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. அச்சமயத்தில் அவர்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய செவிலியர்கள் முகவரிகள் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பணிபுரியும் டாக்டர்கள் பற்றிய தகவல் அறிய தொடர்புக் கொள்ள வேண்டிய முகவரி : டாக்டர். வ.செ.நடராசன், போன் : 2641 2030, கேப்டன். எம்.சிங்கராஜா போன் : 28231388, 9444127704, திரு. எஸ்.முருகையன் போன் : 9884145189

இத்திட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா 22-02-2009 ல் பேராசிரியர் வ.செ.குழந்தைசாமி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் அவர்கள் டாக்டர் அவர்களின் சேவையையும், மூத்த குடிமக்கள் மன்றத்தின் சேவையையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

அவ்விழாவில் **98** வயது ஆகும் திருமதி மீனாட்சியம்மாள் தன் அனுபவத்தை எடுத்துரைத்தார். விபரம் கீழே :-



பேராசிரியர்.வ.செ.குழந்தைசாமி,
டாக்டர் வ.செ.நடராசன் மற்றும்
திருமதி மீனாட்சியம்மாள்.


“எனக்கு ஒரு நாள் நெஞ்சினில் லேசாக வலி வந்தது. டாக்டர் ஐயா எனது பக்கத்து வீடு. என்னை வந்து பாத்திட்டு உங்களுக்கு லேசாக ஆர்ட் அட்டாக் மாதிரி தெரியுது உடனே ஆஸ்பத்திரிக்குப் போகச் சென்னாங்க. எனக்கு இந்த வயதில் எந்த ஆஸ்பத்திரியும் வேண்டாம், நான் போக மாட்டேன் என்று சொன்னேன். அவர் என்னை கட்டாயப் படுத்தியதால் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆர்ட் அட்டாக்குக்காக பத்து நாட்கள் டிரீட்மென்ட் செய்து கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். இப்பொழுது பழையபடி நல்லாயிருக்கிறேன். அடிக்கடி டாக்டர் வந்து என்னை வீட்டிலேயே பார்த்துகிறார். அவர் எனக்கு டாக்டர் அல்ல, அவர் எனக்கு ஒரு பேரன் மாதிரி”

கடமையை செய்யத் துணிவுள்ளவனாக இரு, அதுவே உண்மை வீரத்தின் சிகரம் - சிம்மன்ஸ்

## எண்ணங்களே ஏணிப்படிகள்

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

அலைஅலையாய் எண்ணங்கள்
ஆழ்மனதில் பிறப்பெடுக்கும் !
பிறப்பெடுக்கும் எண்ணங்களே
செயல்களாய்ப் பின் உருவெடுக்கும் !



தூய்மையான எண்ணங்கள்
புனிதமான செயல்களாகும் !
மாசு கலந்த எண்ணங்கள்
மனிதவாழ்வைச் சீர்குலைக்கும் !

எண்ணங்களைச் சீரமைத்தால்
எவரெஸ்ட்டாய் உயர்ந்திடலாம் !
பார் போற்ற வாழ்வதற்குப்
பாதையொன்று அமைத்திடலாம் !

❖❖❖❖❖❖❖❖

## கொங்கு திருமண மாலை, சென்னை

1. மணியன் கூட்டம் 36 வயது M.Com., M.Phil., Ph.D., ஈரோடு கலைக்கல்லூரியில் பணி, மூல நட்சத்திரம், ஒரே பெண், தகுதியான மாப்பிள்ளை தேவை.
2. வெண்டுவன் கூட்டம், 32 வயது, 5’9’’, சிகப்பு (B.E) சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை - சுவாதி 1ம் பாதம், 2 சகோதரிகள், பூர்வீகம் கோவை, தந்தை சென்னையில் சொந்தத் தொழில், படித்த பெண் தேவை.
3. மறுமணத்திற்கு மாப்பிள்ளை தேவை : வயது 36, B.E., சென்னையில் சாப்ட்வேர் இஞ்சினியர், வெண்டுவன் கூட்டம், புனர்பூசம், 4ம் பாதம், மறுமணத்திற்கு தகுதியான மாப்பிள்ளை தேவை.

தொடர்புக்கு
**டி.கே.சுப்ரமணியன்**
60, மேகசின் சாலை (பட்ரோடு), பரங்கிமலை, சென்னை - 600 016.
தொலைபேசி : 044-22311411, 9840364348

❖❖❖❖

தொழிலில் திறமையுடையவனாக இருப்பது, ஒரு கோட்டையின் தலைவனாக இருப்பதைவிடச்சிறந்தது. - எகிப்து.

# வருந்துகிறோம்



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியைச் சேர்ந்தவரும், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.பா.து.இராசன் அவர்களின் புதல்வரும், முன்னாள் தேர்வாணையக்குழு உறுப்பினரும் PDR கல்வி நிறுவனங்களின் தலைவருமான திரு. இரா.தமிழ்மணி, தமிழ்நாடு கால்நடை மருத்துவப்பல்கலைக்கழக முன்னாள் பதிவாளருமான பேராசிரியர் திரு. இரா.குமாரராஜ் ஆகியோருடைய இளைய சகோதரரும், டில்லி உச்சநீதிமன்றத்தில் இந்திய அரசின் கூடுதல் சாலிட்டர் ஜெனரலாகவும் பணியாற்றிய திரு. இரா.மோகன் அவர்கள் தன்னுடைய **59** வது வயதில் டில்லியில் 24-02-2009 அன்று இயற்கை எய்தினார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் பாப்பிரெட்டிப்பட்டி கழக உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்றபின், PUC வகுப்பை கிருஷ்ணகிரி அரசு கலைக்கல்லூரியிலும், B.Sc., பட்டப்படிப்பை சென்னை மாகாணக்கல்லூரியிலும், B.L., சட்டப்படிப்பை சென்னை சட்டக்கல்லூரியிலும் படித்தார். சென்னை உயர்நீதி மன்றத்தில் சிறிது காலம் பணியாற்றினார். மாநிலக்கல்லூரியில் சட்டப்பேராசிரியராகவும் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் கடந்த **28** ஆண்டுகளாக டில்லி உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராகவும், கடந்த ஐந்து ஆண்டுகள் இந்திய அரசின் பெருமை மிகுந்த உயரிய பதவியான கூடுதல் சாலிட்டர் ஜெனரல் ஆகவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றி தமிழகத்திற்கும், குறிப்பாக கொங்கு சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்த்தவர். ஏராளமான சட்டப் புத்தகங்களை எழுதிய இவர் ஒரு சிறந்த பேச்சாளர். உச்சநீதிமன்ற நீதிபதிகளிடமும், வழக்கறிஞர்களிடம் இவருடைய கணீர்குரல் 'வணக்கம்' மிகவும் பிரசித்திப்பெற்றது. சேது சமுத்திரத் திட்டம் போன்ற முக்கிய வழக்குகளில் வாதாடி, பலரின் பாராட்டைப் பெற்றவர்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பாலகிருஷ்ணன், நீதிபதி திரு. சதாசிவம், மத்திய அமைச்சர்கள் திரு. ப.சிதம்பரம், திரு.டி.ஆர்.பாலு, திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு.இராசா, திரு.வெங்கடபதி முன்னாள் அமைச்சர் திரு. தயாநிதி மாறன், மூத்த வழக்கறிஞர் திரு.இரா.காந்தி உட்பட நூற்றுக்கணக்கான வழக்கறிஞர்களும், அலுவலர்களும் இல்லத்திற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, பெரும்புகழுடன் வாழ்ந்த இவரின் உடல் தேசிய மரியாதையுடன் டில்லியில் அடக்கம் செய்யப்பட்டது.

இவரது பிரிவால் வாடும் மனைவி திருமதி விஜயா மோகன், மகள் செல்வி மோவிதா மற்றும் குடும்பத்தார்க்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

---

சிரிக்காத நாளே, வீணான நாள் - நிக்கோலஸ் சாம்ப்போர்ட்

# உன்னத நிலைக்கு வழிவகுக்கும் ஐந்து ஜப்பானிய செயல்முகைள்

## ‘5S’- செயல்முறைகள்

## செய்சோ சுத்தமான பணியிடம்

சென்ற இதழ் தொடர்ச்சி ...

## (SEISO - CLEANING)

க.பாலசுப்பிரமணியம்
முன்னாள் தலைவர்

| எண். | எதை | எப்படி | எப்பொழுது |
|---|---|---|---|
| 1. | நுழைவாயில் முதல் கழிப்பிடம் வரை | அந்தந்த இடத்திற்கு ஏற்றார் போல் சுத்தம் செய்யும் கருவியைக் கொடுக்க வேண்டும் | அசுத்தங்களின் அளவுக்கு தகுந்தாற்போல் அட்டவணையிட்டு |
| 2. | நிரந்தர கறைகள், அழுக்குகள் | சுத்தம் செய்யும் பணிகளை பட்டியல் இட வேண்டும். | சுத்தம் செய்ய வேண்டும் |
| 3. | தினமும் ஏற்படும் கழிவுகள் | வேலை செய்பவர்களே வேலையிடத்தை சுத்தம் செய்ய வேண்டும் | வெளியேற்றும் கால வரை முறைகளை வகுக்க வேண்டும் |
| 4. | தூசு மற்றும் புகை | தூசு ஏற்படும் காரணம் அறிந்து வேரறுத்தல் | |
| 5. | தரை, சுவர்கள் | | |
| 6. | இயந்திரங்கள் உபகரணங்கள் | அவ்வப்பொழுது கழிவுகளை அப்புறப்படுத்துதல். | |
| 7. | அலமாரிகள், டேபிள், சேர்கள். | அட்டவணைப்படி வர்ணப்பூச்சுகள் செய்து | |
| 8. | வழித்தடங்கள் | அழகாக வைத்திருத்தல் | |
| 9. | மூலப்பொருள்கள், கிடங்குகள். | | |

### யார் சுத்தம் செய்ய வேண்டும்

ஒவ்வொரு இடத்திற்கும் சுத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு யாருடையது என்று பட்டியலிட்டு கண்காணிக்க வேண்டும். — செய்பவர், கண்காணிப்பவர் தணிக்கை செய்பவர், என் ஒவ்வொரு பகுதிக்கும் நியமிக்க வேண்டும்

**பயன்கள்**

. சுத்தமான இடம் ஆனந்தமான பணியிடம்.
. செப்பனிடவேண்டிய குறைகள் உடனடியாக தெரிந்து சரி செய்யப்படுவதால் உற்பத்தி தட்டுப்பாடு இல்லாமல் நடக்க ஏதுவாகிறது.

அன்பு அனைத்தையும் வென்றுவிடும். - வர்ஜில்

- பாதுகாப்பான வேலையிடம்.
- வேலை செய்வோருக்கு அவர்கள் வேலை செய்யும் இடத்தோடு ஒரு பிணைப்பை உருவாக்குகிறது.
- அவர்களின் நடத்தை செம்மையாக இருக்கிறது.
- அதிக உற்பத்தி, உயர்வான தரம், குறைந்த செலவு, வாடிக்கையாளர் திருப்தி.

## செய்கெட்சு - விதிமுறைகளை உருவாக்குதல்
## (SEIKETSU - STANDARDISING)

| எதற்காக விதிகள் | பயன்கள் |
|---|---|
| . அவரவர்கள் தன்னிச்சையாக செயல்படாமல் நிர்வாக விதிகளின் படி நடத்தல்<br>. ஒழுக்கமான பழக்கத்தை ஏற்படுத்துதல்.<br><br>. நிறுவனம் முழுவதும் கேட், கட்டிடம், இயந்திரம் போன்றவற்றிற்கு குறிப்பிட்ட வர்ணங்கள், எழுத்துக்கள், அறிவிப்புகள், வழிகாட்டி தட்டிகள், தரை, கட்டிட குறியீடுகள் என பல்வேறு ஒழுங்கு முறைகளை கடைபிடித்தல்.<br>. அட்டவணைகள், பட்டியல்கள், தணிக்கை விதிகள் எனப் பல்வேறு பத்திரங்களில் ஒரே மாதிரியான ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்தல் | . எப்பொழுது பார்த்தாலும் ஒரே மாதிரியான தோற்றப் பொலிவு<br>. வாடிக்கையாளரின் திருப்தி<br>. அனைத்து பகுதிகளும், பிரிவுகளும் எல்லா ஊர்களிலும் எப்பொழுதும் ஒரே மாதிரியான உன்னதமான தோற்றம்.<br>. பார்வையாளர்கள், வேலை செய்பவர்கள் யாரையும் கேட்காமல் தேவையான இடத்திற்குச் செல்லுதல்.<br>. இதனால் அனைவருக்கும் நேரம் மிச்சம்<br>. வேலை செய்பவர்கள் மாறினாலும் விதிமுறைகள் மாறாததால், குழப்பமற்ற வேலை. எப்பொழுதும் பொலிவான தோற்றம்.<br>. விபத்தில்லாமல் வேலை செய்ய முடிகிறது. (அபாயம் 440 Volts, Fire, No Entry, Danger Cable Line, Water Line etc.,)<br>. வேலையிடங்கள், தொழிலாளர்கள், அதிகாரிகள், தணிக்கையாளர் என அடையாளம் காணல்.<br>அதிக உற்பத்தி, உன்னத தரம், குறைந்த செலவு, திருப்தியான வாடிக்கையாளர். |

எளிமையும் மரியாதையும் உயர்ந்த பண்புகள், - நபிகள் நாயகம்

## சிட்சுகே பயிற்சியும், தொடர்முன்னேற்றமும் (SHITSUKE-TRAINING & DEVELOPMENT)

| எதற்காக | பயன்கள் |
|---|---|
| . நல்ல பழக்கத்தைச் சொல்லிக்கொடுத்து அதை வழக்கமாக செய்தல். | . தொடர் முன்னேற்றம் |
| . நல்ல ஆலோசனைகளை வரவேற்று அவைகளை செயல்முறை படுத்துதல். | . நல்ல ஆலோசனைகளுக்கு பரிசு கொடுத்து ஊக்குவிப்பதால் மற்றவர்களும் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுவர் |
| . செயல்முறைகளை தணிக்கை மூலம் அளவிட்டு, மேலும் முன்னேற வழிவகுத்தல். | . குழுவாக ஒருமனதாக செயல்படும் (Team Work) கலாச்சாரத்தை உருவாக்குதல் |
| . தொடர்ந்து தொய்வில்லாமல் செய்வதும், செய்வதை இன்னும் சிறப்பாக செய்ய ஆலோசனை பெறுதல் | . நிறுவனத்தால் பயின்ற நல் ஒழுக்கத்தைப் பொது இடங்களிலும், தன் வீட்டிலும் கடைபிடிப்பதால் ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சியையும், உன்னதமான சுற்றுப்புற சூழலையும் உருவாக்க முடியும் |
| . தொய்வாகச் செய்யும் குழுக்களைக் கண்டு, அவர்களுக்கு 5S செயல் முறையின் அவசியத்தை எடுத்துரைத்து மீண்டும் பயிற்சி கொடுத்தல். | |
| . சிறப்பாக செய்யும் தனிநபர், குழு, தணிக்கையாளர், மொத்த ஊழியர்கள் என அனைவரையும் பாராட்டுதல், சான்றிதழ் அளித்தல், வெகுமதி யளித்தல். | |
| . முன்னேறுவதற்கு ஒரு போட்டியான சூழலை உருவாக்குதல் | |

## நமது அன்றாடப் பிரச்சனைகள்

நாம் எல்லோரும் பரவலாய் வீட்டிலோ, அலுவலகத்திலோ, தொழில் செய்யும் இடத்திலோ எதிர்கொள்ளும் பிரச்சனை என்னவென்றால் தேவையானவற்றைத் தேவையான நேரத்தில் கிடைக்கப் பெறாமல் இருப்பது. இதனால் நாம் அதைத் தேடத் துவங்கிக் காலத்தை வீணடிக்கிறோம். இதன் காரணமாக ஏற்படும் நேர இழப்புகளும், ஏமாற்றங்களும் நமக்கு ஏற்படுத்துவது கோபம், கவலை, குழப்பம், பதைபதைப்பு மற்றும் இன்னும் பிற மனக்கவலை. இதனால் மன அமைதி இழந்து தொழிலை நேசிப்பதற்குப் பதில் மனத்தளவில் வெறுக்கத் தொடங்குகிறோம்.

நாம் பொருட்களைத் தேடும் முயற்சியிலேயே காலத்தை வீணடிக்கிறோம் என்று நீங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்ளுவீர்கள். இதற்கு அடிப்படையான மூலப்பிரச்சனை

மிகவும் சுலபமான காரியத்தை முதலில் செய்வதைத் தவிர்த்து கடினமான வேலையைச் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள் நெப்போலியன் ஹில்

என்னவென்றால், நம் அன்றாட வாழ்க்கையில் சரியான அடிப்படைச் செயல்முறைகளில் ஒழுங்குமுறை இல்லாமல் இருப்பதே.

ஜப்பானியர்கள் வேடிக்கையாகக் குறிப்பிடுவது உண்டு. நீங்கள் 5S ஐக் கடைப்பிடிக்காவிட்டால் உங்களால் (# Sagasu) தேடுதல் என்ற ஒரு S மட்டுமே செய்ய முடியும். ஜப்பானியர்களின் இந்த 5S உத்தியானது நாம் மேற்கண்ட பல பிரச்சனைகளையும், குழப்பங்களையும் தீர்த்து நம் அன்றாட வாழ்வில் சிறந்த வெற்றியை அளிக்க வல்லது. ஒருமுறை இந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு இதனை (5S உத்தியை) நாம் நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டால் நிச்சயமாய் நம் மனஅழுத்தல், கவலை, கோபம், குழப்பம் இவற்றில் இருந்து விடுபட்டு தொழில், தொழில் புரியும் பணிச்சூழல், திறமை, உற்பத்தி திறன், தரம் முதலானவற்றில் மிகப்பெரிய முன்னேற்றத்தைப் பெற முடியும். இதன் மூலம் நாம் மட்டுமல்லாமல் நிறுவனம், நாடு என எல்லை விரிந்து நம் எல்லோரையும் வளர்ச்சியின் பாதையில் இட்டுச் செல்ல முடியும். இன்றைய மாறிவரும் தொழில் முறையில், உலக நாடுகளின் போட்டியைச் சந்திக்க நாம் ஒவ்வொருவரும் புதிய வழிமுறை, உத்தி ஆகியவற்றைத் தத்தெடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் பரந்த மனப்பான்மை கொண்டு இந்தத் தொடர் மாற்றத்தை வரவேற்க வேண்டும்.

**5 S என்றால் என்ன ?**

5S என்பது தொழில் புரியும் இடத்தின் அமைப்பை மேம்படுத்தி அதனை ஒரு மகிழ்ச்சிகரமாகப் பணியாற்றும் இடமாக மாற்ற ஏற்படுத்தப்பட்ட ஓர் அடிப்படை உத்தி. இது நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களை எளிமையாய்க் கண்டுபிடிக்க, மாற்றம் செய்ய மிகவும் உதவியாய் இருக்கும். நம் பணியிடத்தை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருப்பதற்கு நம்மை வழிநடத்தும், சில கொள்கைகள், சட்ட திட்டங்கள் முதலானவற்றை நாம் மேற்கொண்டு வந்தாலே நம்மால் தொழிற்சாலையை நேசிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திப் பணித் திறனையும் அதிகரிக்க முடியும்.

நாம் இந்தக் கட்டுரையில் விவாதிக்கக் போகும் எந்தப் பொருளும் நமக்குப் புதியதன்று, நாமும் வருடத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ, தேவையற்றவைகளை அகற்றி மற்ற பொருள்களை அடுக்கி, பாதுகாத்து தொழிற்புரியும் இடத்தையும் கருவிகளையும் சுத்தம் செய்கிறோம். ஆனால் இதனை நாம் ஒரு வேலையாகத் தொடர்ந்து செய்யாமல் பூஜை, வருடப்பிறப்பு அல்லது மிக முக்கிய நிகழ்ச்சி அன்று மட்டுமே செய்கிறோம். இதனால் நாம் தேடுவதிலேயே நேரத்தை வீணடித்து நம்முடைய பணிகளில் கவனத்தையும் திறனையும் இழக்கிறோம்.

நம்முடைய வீடோ, அலுவலகமோ, எதுவானாலும் சுத்தம் இல்லாமல், ஒழுங்குமுறை இல்லாமல் இருந்தால் நிச்சயமாய் நம்மால் உயர்ந்த பலனைப் பெற முடியாது. மேலும் பலனைத் தராத உழைப்பு நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் வியாபாரத்திலும் தோல்வி அடைய வைத்து விடும்.

இந்த 5S உத்தியை நடைமுறைப்படுத்தினால் உங்களுக்கு இன்னொரு 5S தானாகவே கிடைக்கும். அது தான் Shikkari Shiyoo (எதிலும் உன்னதம்) என்பதாகும். இருக்கும் பொருள்களைக் கொண்டு நம் அன்றாட வாழ்வில் வெற்றி பெறுவதற்கு நாம் இந்த 5S நுணுக்கத்தைப் பயன்படுத்த வேண்டியது அவசியம். நீங்கள் எவராயிருந்தாலும் எதைச்செய்தாலும் உங்கள் வாழ்க்கையில் வெற்றி அளிப்பவை இந்த ஐந்து படிக்கட்டுகளே.

❖❖❖❖

உண்மையைக் கடைப்பிடிப்பவர்கள் ஆயிரம் வீரர்களைவிட வலிமை மிக்கவர். - சிம்மன்ஸ்